எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரகம், 110, அண்ணா சாலை, சென்னை–2

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

பிறப்பிப்பவர்: திருமதி.ஆ.சுகந்தி, இ.ஆ.ப., ஆணையர்.

ஆணையரக கடித எண். இ3/33253/2019 நாள்: 15.11.2021

*பொருள்:* பணியமைப்பு – எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், சென்னை–2 – கருணை அடிப்படையில் செல்வி.த.மோனிஷா, இளநிலை உதவியாளராக பணி நியமனம்– **04.10.2019** அன்று பிற்பகல் பணியேற்றது – தனியரின் பணியினை இளநிலை உதவியாளராக பணியேற்ற நாளான **04.10.2019** பிற்பகல் முதல் வரன்முறை செய்து – **04.10.2019** பிற்பகல் முதல் இரண்டாண்டுகால தகுதிகாண் பருவ காலத்தில் வைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

*பார்வை:*
1. இயக்.செயல்முறை ஆணை எண்.பி1/11264/2019, நாள் 01.10.2019.
2. இயக்.செயல்முறை ஆணை எண்.இ3/33253/2019, நாள் 15.10.2019.
3. அரசாணை நிலை எண்.100 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை நாள் 01.08.2018.
4. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த் துறை, நாள் 23.01.2020.

-----

எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையைச் சார்ந்த அரசு கிளை அச்சகம், உயர்நீதிமன்ற வளாகம், சென்னை–104ல் இளநிலை புத்தகம் கட்டுநராகப் பணிபுரிந்து 28.02.2019 பிற்பகல் மருத்துவ இயலாமை ஓய்வில் சென்று 30.03.2019 அன்று உடல் நிலை சரியில்லாமல் மரணமடைந்த திரு.எஸ்.தனசேகர், என்பவரின் வாரிசுதாரரான அவரின் மகள் செல்வி.த.மோனிஷா என்பவரை கருணை அடிப்படையில் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்ககம், சென்னை–2ல் இளநிலை உதவியாளர் பதவியில் தற்காலிகமாக பணிநியமனம் செய்து பார்வை 4–ல் காணும் 01.10.2019 நாளிட்ட இயக்கக செயல்முறை ஆணையில் ஆணையிடப்பட்டது.

2) தனியர், இளநிலை உதவியாளர் பதவியில் 04.10.2019 பிற்பகல் பணியேற்பு செய்து ஆணையரகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

Scanned with Oken Scanner

3) பார்வை 3–ல் காணும் 14.01.2020 நாளிட்ட அரசாணை (நிலை)எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த(M)த் துறை நாள் 01.08.2018ல், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்டவர்களின் பணியினை வரன்முறை செய்வது குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளதாக ஆணையிடப்பட்டுள்ளது.

4) மேலும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையால் வெளியிடப்பட்ட அறிவுறுத்தங்களின்படி, கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற அனைத்துத் தகுதிகளையும் தனியர் பெற்றுள்ளார். தனியரது பத்தாம் வகுப்பு கல்விச் சான்றிதழ் குறித்த உண்மைத் தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது.

5) அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1)த் துறை, நாள் 26.02.2021ல் 02.02.2016 முதல் 31.12.2019 வரை கருணையடிப்படையில் பணியமர்த்தப்பட்டு எந்தவித விதித்தளவு (Relaxation of Rules) மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு (Exemption of Government Orders) தேவைப்படாத அனைத்து பணியாளர்களின் பணி நியமனமும் நடைமுறையில் உள்ள விதிகளுக்குடபட்டு வரன்முறைப்படுப்படுகிறது. எனவும், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற்ற அரசு பணியாளர்களின் பணியினை வரன்முறைப்படுத்த விதித்தளர்வு / அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படும் கருத்துருவினை அரசிற்கு உரிய வழிமுறையாக அனுப்பப்பட வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. தனியர் கருணையடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்ய வரையறுக்கப்பட்ட அனைத்து தகுதிகளையும் நிறைவு செய்துள்ளதால், தனியரது பணியினை வரன்முறைப்படுத்த விதித்தளர்வு / அரசாணைகளுக்கு விலக்கு குறித்து தேவை எழவில்லை.

6) தனியர், இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த 04.10.2019 பி.ப.அன்று உடல் தகுதி குறித்த மருத்துவ தகுதிச் சான்றிதழினை சமர்ப்பித்துள்ளார். தனியர் சமர்ப்பித்துள்ள மருத்துவச் சான்றிதழின்படி, தனியர் அரசுப்பணியில் சேருவதற்கான உடல் தகுதியை பெற்றுள்ளார்.

7) எனவே, பார்வை 4–ல் காணும் (நிலை) எண்.48, தொழிலாளர் ... நாள் 23.01.2021–ன்படி, கருணை

ஆணையிடப்படுகிறது. மேலும் பணிவரன்முறைப்படுத்தப்பட்ட நாள் முதல் இரண்டு ஆண்டுகால தகுதிகாண் பருவத்தில் வைத்தும், இரண்டாண்டு தகுதிகாண் பருவகாலத்தை தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்தில் நிறைவு செய்ய வேண்டும் என்வும் தகுதிகாண் பருவ காலத்தில் பவானிசாகரில் உள்ள அரசு அலுவலர்கள் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது.

8) தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு ஆணையரின் நேர்முக உதவியாளர் ஆணையரகம், சென்னை–2 அவர்களுக்கு இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

ஆ.சுகந்தி,
ஆணையர்.

பெறுநர்

செல்வி.த.மோனிஷா,
இளநிலை உதவியாளர்,
ஆணையரகம்,
சென்னை–2.

நகல் பெறுநர்

1. ஆணையரின் நேர்முக உதவியாளர், ஆணையரகம், சென்னை–2
2. உதவி இயக்குநர் (நிர்வாகம்), ஆணையரகம், சென்னை–2.
3. சம்பள கணக்கு அலுவலர், சம்பள கணக்கு அலுவலகம்,(கிழக்கு) சென்னை–8.
4. கண்காணிப்பாளர், 'எச்' ஆணையரகம், சென்னை–2.
5. கண்காணிப்பாளர் 'இ' பிரிவு / இ4 உதவியாளர், ஆணையரகம், சென்னை–2.
   உதிரி – 2 நகல்

நகல் இடம் பெறல்

1. ஆணையர் அவர்களின் மேசைக்கு கனிவான தகவலுக்காக
2. இணை இயக்குநர் அவர்களின் மேசைக்கு கனிவான தகவலுக்காக

Scanned with Oken Scanner